T. 5856

தமிழ்ச் சிட்டு

T. 5856



சிந்தித்துப் பார்ப்பீர்களே!

சிந்தித்துப் பார்ப்பீர்களே!—எதிலும்
சிறந்தவற்றை ஏற்பீர்களே!—நன்றாய்ச்
சிந்தித்துப் பார்ப்பீர்களே!

முந்திச்செய் தார்என்ப தாலோ—ஒன்றை
மூத்தோர்எல் லாரும்செய் தார்என்ப தாலோ,
வந்திட்ட பழக்கமிது வென்றோ—எங்கள்
வழிவழி வழக்கமிது வென்றோ எண் ணாமல் (சிந்)

பழைமையிது பெருமையிது வென்றோ—எங்கள்
பாட்டனார் சொன்னதிது செய்ததிது வென்றோ
பிழையான கருத்துகளை எல்லாம்—எண்ணிப்
பாராமல் ஓராமல் செய்வதற்கு முன்னம் (சிந்)

புதுமையிது கவர்ச்சியிது வென்றோ—மேற்குப்
புறநாட்டார் கீழ்நாட்டார் புகழ்ந்ததிது வென்றோ
கதுமெனவே உணர்வுகொள் ளாமல்—முழுக்
கவனமாய் அமைதியாய் அறிவுடனே எதையும் (சிந்)

சே. எண்: 26053

ப்: 21
ச: 2

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை:
உருபா: 1-00

முத்துமொழிகள்

கடவுளைப் பற்றி!

∴ கிறித்து தருக்க நூல் எதுவும் தந்து போகவில்லை; அவர் தந்திருப்பது சில எளிய உண்மைகளே —ஏடன்

∴ நமக்குத் தேவையானவற்றை எல்லாம் கடவுளிடம் வேண்டலாம். ஆனால் வேண்டுவன எல்லாவற்றுக்கும் நாம் கவனமாய் உழைத்தல் இன்றியமையாதது; —செரிமி டெய்லர்

∴ நம்மில் உயர்ந்தோரிடமும் எவ்வளவோ தீமை இருக்கின்றது: நம்மில் தாழ்ந்தோரிடமும் எவ்வளவோ நன்மை இருக்கின்றது: ஆகையால் பிறரைப் பற்றிப் பேச நம்மில் எவருக்கும் தகுதி இருப்பது அரிது. —ஓர் அமெரிக்க பாடல்.

∴ அறநெறி பற்றிப் பேசுவதன்று. அறநெறியில் நடப்பதுவே இன்பத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். —எம். என்றி.

∴ கடவுளிடம், 'இதுவேண்டும்' என்று குறிப்பிடாமல் பொதுவாக வேண்டுவதே முறை. நமக்கு நன்மை எது என்பதைக் கடவுள் நன்கு அறிவார். —சாக்ரடீசு

∴ குழந்தை இயல்புடையவர்—அஃதாவது எளிதில் மகிழ்பவர்: அன்பு செய்பவர், பிறர்க்கு மகிழ்வூட்டுபவர்—இவர்க்கே கடவுள் அரசு. —ஆர். எல். இசுடீவன்சன்.

∴ நானில்லையானால் கடவுளும் இருக்க முடியாது. —எக்கார்ட்.

∴ அறிவின் முன்னணியில் போர் புரிவோர்க்குப் பெரும்பான்மையோர் ஆதரவு ஒரு நாளும் கிடைப்பதில்லை.

∴ கோவில் வைத்துக் கும்பிடும் கடவுளை மாந்தனே படைத்தான். அதனால் மாந்தன் தன்னைப் போலவே கடவுளையும் படைத்திருக்கிறான். —எர்மீசு.

பொதுவானவை!

∴ பொய்யானவற்றால் கவரப்படும் மனம் நல்ல செய்திகளில் சுவை காணாது. —ஓரேசு.

∴ முரணில்லாதிருக்க முயல்க. உண்மையாயிருக்க மட்டுமே உழைத்திடுக. —ஓம்சு.

∴ ஒன்றே உள்ளது; பல மாறி மறையும்,
விண் வெளிச்சம் என்றும் ஒளி தரும்,
மண்ணின் நிழல்கள் பறந்தோடிவிடும். —செல்லி.

∴ உண்மையை அடைய விரும்பினால் உண்மைக்குரிய வழியில் சிறுகச் சிறுக முன்னேறிச் செல்க. —டாலர்.

∴ உண்மையின் முகம் அவ்வளவு அழகு! தோற்றம் அவ்வளவு பெருமிதம்! அதைப் பார்த்தால் போதும், நேசியாமல் இருக்க முடியாது. —டிரைடன்.

∴ வாழ்வாகிய துணியில் எப்பொழுதும் இருவகை நூல்கள் இருக்கும்; நன்மை தீமையே அவை. —சேக்சுபியர்.

∴ அற உணர்ச்சி அளிக்காத சடங்குகள் அனைத்தும் அழிக்கத்தக்கவையே! —சவன ரோலா.

தொகுப்பு-செல்வி-பெ. குறிஞ்சி, மூர்த்திக்குப்பம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே !

குரல் , 21] (தி.பி-2021) மேழம்-கடகம் (மே-ஆகத் 90') [இசை-2

உடன்பாடும் முரண்பாடும்!

இவ் வுலகியல் நடைமுறைகளுக்கு நம்முடைய கருத்தும், சொல்லும், செயலுமே மூன்று அடிப்படைக் கூறுகளாக உள்ளன என்பதை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இனி, இம் மூன்று கூறுகளுக்குமே மனம், அறிவு, உடல் ஆகிய மூன்றும் காரணக் கூறுகளாக இருப்பதையும் நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

கருத்தால் நாம் ஒவ்வொருவரும் தனித் தனியாகச் செயல்படுகிறோம். கருத்தைச் சொல்லால் வெளிப்படுத்திப் பிறரைச் செயலுக்கு உள்ளாக்குகிறோம். (சொல், ஒலியாகிய உரைக்கும், ஒளியாகிய எழுத்துக்கும் பொருந்தும்.)

கருத்தைத் தழுவி சொல் தோன்றுகிறது, சொல்லைத் தழுவிச் செயல் நிகழ்கிறது.

(இனி, தோன்றும் கருத்து முழுவதையும் சொல்லாக வெளிப்படுத்த முடியாமற் போவதும், வெளிப்படுத்திய சொற்கள் முழுவதையும் செயலாகச் செய்ய முடியாமற்போவதும், வேறு வேறு.)

கருத்து, சொல், செயல் மூன்றுக்கும் மனம், அறிவு, உடல் மூன்றும் காரணங்கள். கருத்து, சொல், செயல் மூன்றும் கருமியங்கள். காரணின்றிக் கருமியம் நிகழாது.

இனி கருத்து, சொல், செயல் ஆகிய மூன்று கருமியங்களும் முழுமையாக, நிறைவாக நிகழ்வுற வேண்டுமானால், மனம், அறிவு, உடல் மூன்று காரணங்களும் முழுமையாக ஒத்து இயங்குதல் வேண்டும்.

மனம், அறிவு ஆகிய இரண்டு காரணங்கள் மட்டுமே செயல் பட்டால், கருத்து மட்டுமே தோன்றும்; சொல்லும் செயலும் நிகழா. மனம், அறிவு இரண்டுடன் உடல் சேர்ந்து இயங்கினால் மட்டுமே சொல், செயல் நிகழும். இவ் விளக்கங்களைக் கீழ்வரும் சமன்பாட்டால் குறிக்கலாம்.

மனம் + அறிவு —> கருத்து.

மனம் + அறிவு + உடல் —> கருத்து —> சொல் —> செயல்.

இனி, மனவுணர்வு கூடியும் (+), அறிவுணர்வு குறைந்தும் (—) கருத்தும் சொல்லும் தோன்றுவதும் உண்டு. அதே போல் மனவுணர்வு குறைந்தும் (—) அறிவுணர்வு கூடியும் (+) கருத்தும், சொல்லும், தோன்றுவதும் உண்டு. ஆனால் எவ்வாற்றானும் இவ் விருவழியாகத் தோன்றும் கருத்தும் சொல்லும் குறைவுடையனவாகவே இருக்கும்.

மனம்	×	அறிவு	—>	கருத்து,	சொல்.
(+)	×	(—)	—>	(—),	(—)
(—)	×	(+)	—>	(—),	(—)
(+)	×	(+)	—>	(+),	(+)

இவ் வுணர்வியல் சமன்பாடுகளுடன், கணக்கியல் சமன்பாட்டில் வரும் ஒரு கூறான (—) × (—) —> (+) என்பது பொருந்தாது.

அஃதாவது, மனமோ அறிவோ சேராமல் சொல்லோ கருத்தோ தோன்றா.

இவ் விளக்கங்களை இவ்வளவில் நிறுத்திக் கொண்டு, மனத்திலும் இறுத்திக் கொண்டு, உளவியலும் உணர்வியலும் கொண்டு இயங்கும், அடுத்த நிலை விளக்கங்களைப் பார்ப்போம்.

நம் ஒவ்வொருவரிடமும் தனித் தனியாக, மனமும், அறிவும் செயலும் உண்டு. இவற்றை நம் அளவாக இயக்கும் ஆளுமைப் பரப்பும் உண்டு.

இவ்வாறு எண்ணிப் பார்த்தால் நாம் அனைவரும் தனித்தனி உலகத்தைப் போன்றவர்கள். ஆனாலும் தனித்தனியாக இயங்க முடியாது; இயலாது. சேர்ந்து ஒரே மக்கள் குமுகமாகத்தான் இயங்க முடியும். அப்படி இயங்கும்போதுதான் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்னும் இயங்கியல் கோட்பாட்டை நாம் கடைப்பிடித்து வாழவேண்டியுள்ளது.

நாம் உருவம், தோற்றம், பொலிவு, உணர்வு, பண்பு, குணம் (பண்பு வேறு; குணம் வேறு. பண்பு இவ் வுலகியல் தன்மை உடையது. குணம் உயிரியல் தன்மை உடையது;

பண்பை மாற்றிக் கொள்ளமுடியும்; குணத்தை மாற்றிக் கொள்ள முடியாது.) அறிவு, ஆசை, பாசம், விருப்பு, வெறுப்பு, உணவு, உடை, இயக்கம், ஈடுபாடு, கொள்கை, முயற்சி—முதலிய அத்தனை நிலைகளிலும் வேறுபட்டவர்கள். இருப்பினும் நாம் ஒன்று பட்டுத்தான்—மக்களுடன் மக்களாய், உடன் பிறப்புகளாய், கணவன், மனைவியராய், உறவினர்களாய், உற்றார்களாய், ஊரினராய், நாட்டினராய், உலகத்தினராய்,—வாழ வேண்டியிருக்கிறது. இவற்றுள் இன்னும் புறநிலை வேறுபாடுகளான, சாதிகள், மதங்கள், இனங்கள், மொழிகள், நடைமுறைப் பழக்கங்கள், கொள்கைகள், கட்சிகள், வாழ்வியல் முறைகள் என்பவை வேறு, நம்மை மேலும் மேலும் பல்வேறு பிரிவுகளுக்கு உள்ளாக்கி நம்முள் வேற்றுமைகளை வளர்த்திருக்கின்றன; வளர்த்து வருகின்றன. இவ் வேற்றுமைகளிடையில்தாம் நாம் ஒருவரோடொருவர் உறவும் நட்பும் கொண்டாடி வாழ்ந்து வர வேண்டியுள்ளது. இந்நிலையில் நம் போல் இருவருடைய ஈடுபாட்டில், இணைந்து இயங்கும் இயக்கத்தில், சில நேரங்களில் நமக்குள் பெரும்பாலும் ஒன்றிய உணர்வுகளால் உடன்பாடும், பெரும்பாலும் வேறுபட்ட உணர்வுகளால் மாறுபாடும் தோன்றுவது இயற்கை.

இக் கருத்துரையில் நம்மிடையே தோன்றும் உடன்பாட்டுணர்வுகள் பற்றியும் மாறுபாட்டுணர்வுகள் பற்றியும் சிறிது ஆழமாகவும் விளக்கமாகவும் தெரிந்து கொள்வோம்.

நம் ஒவ்வொருவருக்கும் தனித்தனி உணர்வுகளாக மனவுணர்வும், அறிவுணர்வும், உடலுணர்வுகளும் இருந்து கொண்டிருப்பதை முன்னரே பார்த்தோம்.

அன்பு, நட்பு, உறவு, உதவுதல்தன்மை, இரக்கம், விருந்தோம்புதல், பணிவுடைமை, பொறுத்தல்தன்மை, நன்றியறிதல், பொறாமைப்படுதல், பகை கொள்ளுதல், வெறுத்தல், விரும்புதல், எதிர்த்தல், நல்லன பேசுதல், எரிச்சல் கொள்ளுதல், தீயவை செய்தல், நல்லவை செய்தல், இணக்கமுடன் இருத்தல், பிணக்கம் கொள்ளுதல், ஈதல்தன்மை, அருளுணர்வு, சினம் கொள்ளுதல், கொலை, களவு, துறவு இன்னோரன்ன பல்வேறு வகையான உணர்வுகள் மனவுணர்வின் பாற் படும்.

கல்வி, கேள்வி, பேதைமை, கல்லாமை, அறியாமை, குற்றம் காணுதல், பெரியோரை மதித்தல், ஆசிரியர்க்கு அடங்குதல், பொருள்களைப் பற்றியறிதல், பிறரைப் பற்றி அறிதல். இடம், காலம், நாடு, வரலாறு பற்றியறிதல், தொழிலறிவு, செயலறிவு, உறவுணர்வை வளர்த்தல், நேர்மை, ஞாயம், துன்பத்தை விரும்பாமை, இன்பத்தை விரும்புதல், ஆளுதல் தன்மை, சொல்வன்மை, எழுத்துவன்மை, அதிகாரம், பதவி ஏற்றல், பொருள் விரும்புதல், பொருளீட்டுதல், அறிவு நாட்டம், தொண்டுணர்வு, மொழி, இன, நாட்டுப் பற்றுகள், குழுக்கூடுதல், படை சேர்த்தல், போர் செய்தல், அல்லவை தவிர்த்தல், நல்லவை நாடல்,

பொழுது போக்கு, விளையாட்டுணர்வு, உடற்பயிற்சி செய்தல், சூதாடுதல், போட்டிகளில் பங்கேற்றல், கலைகளை அறிதல், மானவுணர்வு, பெருமையுணர்வு, பண்புணர்வு, நாணவுணர்வு, குமுகாய உணர்வு, ஒழுக்கம், ஒழுக்கக்கேடு—முதலிய இன்னோரன்ன உணர்வுகள் அறிவுணர்வின் பாற் படுவன.

உடலின்பம்,பசி, தூக்கம்,சோம்பல், பேசுதல் காற்றில் தோய்தல், மழையில் நனைதல், வெயிலில் காய்தல், சொறிதல், புலன் நுகர்ச்சி(கண்டு,கேட்டு, உண்டு, நக்கி, குடித்து, ஒத்தி, தேய்த்து, தட்டி, நீவி, இடித்து, குத்தி—மகிழ்கின்ற உணர்வுகள்)-போன்ற இன்னோரன்ன உணர்வுகள் உடலுணர்வின் பாற் படும்.

இம் மூன்று வகையான உணர்வு எழுச்சிகளும் நம் ஒவ்வொருவரிடத்தும், இவ்வுலகியல் ஈடுபாடுகளுக்கும் இடம், பொருள், கருவி, காலம், சூழல் ஆகியவற்றுக்கும் ஏற்ப, மாறி, மாறி எழுந்தும், விழுந்தும், அடங்கியும், அடங்காமல் ஆர்த்தும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. இதில் நாம் இன்னும் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இவ்வுணர்வுகள் தனித்தனியாக இயங்குவதில்லை. ஒன்றுடன் ஒன்று கலந்தும், உறழ்ந்தும் (அளாவியும்), உடன்பட்டும், மாறுபட்டும் இயங்கிக் கொண்டு உள்ளன. அவற்றை நாம் பிரித்துணர்தலும், அளவறிதலும், வலிவு அறிதலும், தவிர்த்தலும் கடினம், கடினம் மிகக் கடினம். குறிப்பிட்ட ஒரு நேரத்தில், ஒருவர் நாம் எதிர்பார்க்கும் உணர்வுடன் இருப்பார் என்று கூற முடியாது. இனி, இம் மூவகை உணர்வுகளும் ஒருவரிடம் ஒரே அளவாக இருக்கும் என்றும் சொல்ல முடியாது. பொதுவாகவும், தெளிவாகவும், மிகச் சரியாகவும் சொன்னால், இந்த உணர்வுகளால் ஒவ்வொருவரும் எப்பொழுதும் எந்த நிலையிலும் ஆட்டிவைக்கப் பட்டுக் கொண்டே இருக்கிறார். எந்த உலகியல் வேறுபாடும் இன்றி, அரசன், ஆண்டி, அறிஞன், மூடன், நல்லவன், கெட்டவன், ஆண், பெண், அலி, சிறுவர், குழந்தை இல்லறத்தான், துறவறத்தான், நோயாளி, நோயின்றியுள்ளவன், நாட்டிலிருப்பவன், காட்டிலிருப்பவன், நிலத்தில் உள்ளவன், நீர்மேல் செல்பவன், தூங்குபவன், விழித்திருப்பவன், கூட்டத்திற்கிடையில் உள்ளவன், அவை இல்லாதவன்—எனப் பெறும் அனைவரும் இம்மூவகை உணர்வுகளுக்கும் எப்பொழும் ஆட்பட்டே இருக்கின்றனர் என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒருவன் தன் தாயுடன் பேசியபடி அன்பாயிருப்பான்; ஆனால் பசியுடன் இருப்பான்; அத்துடன் அவன் மக்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டுமிருப்பான். ஒரே சமயத்தில் அவன் தாயுடன் பேசிக் கொண்டுள்ள அன்புணர்வு மனத்தின் பாற்பட்டது; பசியுணர்வு உடலின் பாற் பட்டது; மக்கள் பற்றிய குமுகாய உணர்வு அறிவின் பாற் பட்டது! இவ்வாறாகத்தான் நாம் அனைவரும் ஒரே சமயத்தில் பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளுடன் இயங்கிக் கொண்டு இருக்கிறோம்.

(தொடரும்)

தெரிந்து கொள்ளுங்கள்!

- உலகில் உள்ள நாடுகள் 254. அவற்றுள் உலக ஒன்றிய மன்றத்தில் (ஐ. நா.-வில்) சேர்ந்துள்ள நாடுகள் 160. தமிழ் இன மக்கள் வாழ்கின்ற நாடுகள் 72. இவர்கள் தொகை13 கோடி.
- நடைமுறையில் உள்ள திருவள்ளுவர் ஆண்டு, சென்னை, பச்சையப்பன் கல்லூரியில், 1921-ஆம் ஆண்டு, தமிழ்க்கடல் மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு. வி. க., தமிழ்க் காவலர் கா. சுப்பிரமணியனார், சைவப் பாதிரியார் சச்சிதானந்தம், தமிழ்ப் பேரறிஞர் உ. வே. சாமிநாதர், நாவலர் ந. மு. வேங்கடசாமி, நாவலர். சோமசுந்தரனார் ஆகியோர் கூடி, பல வகையிலும் ஆராய்ந்து, திருவள்ளுவர் ஏசு கிறித்துப் பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு வாழ்ந்தவர் என்று முடிவு செய்து, வழங்கி வருவதாகும்.
- தமிழகத்தில் இக்கால் 93,576 இலங்கைத் தமிழ் ஏதிலிகள் (அகதிகள்) உள்ளனர். அவர்களில் தமிழக அரசு அமைத்துக் கொடுத்த தங்கில்(முகாம்)களில் உள்ளவர்கள் 4259 பேர்கள். ஓரிசாவில் உள்ளவர்கள் 1600 பேர்கள். மீதியுள்ள 87,717 பேர்கள் தமிழ் நாட்டிலும் பிறவிடங்களிலும் தங்கள் தங்கள் பொறுப்பிலேயே தங்கியுள்ளனர் என்று அரசு குறிப்பு ஒன்று கூறுகிறது.
- ஒவ்வொரு மார்ச்சு மாதம் 8-ஆம் பக்கலையும் உலகப் பெண்கள் நாளாக உலக ஒன்றிய மன்றம் (ஐ. நா.) அறிவித்துக் கொண்டாடி வருகிறது.
- மீன், இறால் முதலிய கடல் வாழ் பொருள்களை வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் வழி, இந் நாட்டுக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ உரு 560 கோடி வருமானம் கிடைக்கிறது.
- இந்தியாவின் கடற்கரை நீளம் 7500 அயிர மாத்திரியாகும்; அதாவது ஏறத்தாழ 4700 கற்களாகும்.
- தமிழில் இதுவரை கலைச்சொல் ஆக்க நூல்கள் ஏறத்தாழ 200 தொகுப்புகள் வெளிவந்துள்ளன என்றும், அவற்றுள் ஏறத்தாழ இரண்டு இலக்கம் கலைச்சொற்கள் ஆக்கப் பெற்றுள்ளனவாகவும் கணக்கிடப் பெற்றுள்ளன.
- இந்தியாவில் ஓர் ஆண்டுக்காகும் பாதுகாப்பு (படைத்துறை)ச் செலவு பதினைந்தாயிரம் கோடி உருபாவாகும். இது நாட்டு வருமானத்தில் 3.4 விழுக்காடு ஆகும்.
- இந்தியா உரிமை பெற்ற போது நாட்டிலிருந்த பல்கலைக் கழகங்கள் 17தான். இன்றைக்கு இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் 160.
- ஒருவர் தம் தலையின் நரைமுடியை மறைக்க தலைச்சாயத்தைத் தொடர்ந்து 10 ஆண்டுகள் பூசி வந்தால், அவருக்கு சிறுநீரகப் புற்றுநோயும், தலைக்கு ‘சாம்பு’ என்கிற ‘கழுவு நுரை’யும் போட்டுக் குளித்தால் கல்லீரலில் புற்றுநோயும் உண்டாகலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நகைச்சுவைக் கதை;

அவநம்பிக்கையாளன்

ஓர் ஊரில் ஓர் அவநம்பிக்கையாளன் இருந்தான். அவன் எந்தச் செயலிலும் அவநம்பிக்கையே கொண்டு வாழ்ந்தான். யார் என்ன சொன்னாலும் அதை அவன் உடனே நம்பமாட்டான். அதற்குப் பலவேறு காரணங்களை அவனே கற்பித்துக் கொள்வான்.

ஒருநாள் அவன் ஒரு புதிய சட்டையை வாங்கினான். அதில் எதிர்பாராத வகையாக எழுதும் மை கொட்டி விட்டது. அவன் மிகவும் வருத்தத்துடன், அந்தப் புதிய சட்டையைக் கசக்கித் தேய்த்து அந்த மையை அகற்றுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தான்.

ஆனாலும் அந்தச் சட்டையில் அப்பியிருந்த மை போகவே இல்லை. அதற்கு மாறாக அது சட்டையில் மேலும் அதிகமாகப் பரவியது.

''இ'து' இப்படித்தான் ஆகும் என்று எனக்குத் தெரியும். இ'தெல்லாம் ஒரு சட்டையா? மை உறிஞ்சும் தாளில் செய்த சட்டை மாதிரி ஆகிவிட்டது''—என்று பொருமிக் கொண்டே இருந்தான் அவநம்பிக்கையாளன்.

'அவனுடைய நண்பர்கள் அவனுக்கு ஆறுதல் கூறினர். ''இ'து ஒன்றும் தீர்க்க முடியாத பெரும் சிக்கல் இல்லை. சட்டையை வெளுப்புக்குப் போடு, அவர்கள் தூய்மை செய்து விடுவார்கள். கவலைப் படாதே''—என்று அவர்கள் அவனிடம் கருத்துக் கூறினார்கள்.

அதற்கு அவன், ''என்ன விளையாடுகிறீர்களா? நம்முடைய வெளுப்பார்களைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன?'' என்று துணி வெளுப்பார்கள் மீது சற்றும் நம்பிக்கை இல்லாமல் கூறினான். அத்துடன் மேலும் 'இதையெல்லாம் அவர்களால் உடனே போக்கித் தூய்மை செய்துவிட முடியாது. தூய்மை செய்வதற்கு அதிக நாள்கள் ஆகிவிடும்.' என்று அவநம்பிக்கையுடன் சொன்னான்.

இவ்வகையில் அவன் நீண்ட நேரம் எண்ணிப் பார்த்து, முடிவில், வேறு வழியின்றி அவன் நண்பர்களின் கருத்துப்படி, அந்தச் சட்டையை வெளுப்பதற்குப் போட்டான்.

வெளுப்புக் கடையிலிருந்து சட்டை திரும்பி வந்தது.

''என்ன தூய்மை செய்து விட்டார்களா?'' என்று ஆவலுடன் அவன் நண்பர்கள் கேட்டார்கள்.

அவநம்பிக்கைக்காரன் குரலில் சுரம் அற்றவனாய், ''ஆமாம், என்னவோ தூய்மை செய்து விட்டார்கள்! இதெல்லாம் ஒரு மையா! அட! சே!'' என்று மையின் தரத்தைச் சலித்துக் கொண்டான்.

—எல். காமின்சுகி; துமாரிசன்,

—நன்றி: சோவியத்து நாடு, சூன் '90.

தொடர்ச்சி 2:

கழக எழு வள்ளல்கள்!

2. வேள்பாரி

தமிழகம் தந்த கழகக் கால ஏழு வள்ளல்களில் பறம்பு மலையையும் அதைச் சார்ந்த முந்நூறு ஊர்களையும் ஆண்ட வேள்பாரியும் ஒருவன். இவன் வேளிர் குலத்தவனுதலின் வேள் பாரி என்றும் பாரிவேள் என்றும் அழைக்கப் பெற்ருன்.

'முந்நூர் ஊர்த்தே தண்பறம்பு நன்ருடு'

என்னும் அடியால் அவன் நாடு முந்நூறு ஊர்களைக் கொண்டிருந்தது என்பதை அறியலாம்.

இவன் கழகக் காலத்தவன். இவன் ஆண்ட நாடு, தகடூர் நாட்டுக்கருகில், சேலம், கோவைக்கு மேற்கே உள்ளதென்று ஒரு சாராரும், முகவை எனப் பெறும் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூருக்கருகில் உள்ள பிரான்மலை என்று இக்கால் வழங்கப் பெறும் மலையே இவன் ஆண்டிருந்த பறம்புமலை என்று மற்றெரு சாராரும் கூறுவர், இக் கருத்தையே பலரும் இக்கால் ஏற்றுக் கொண்டுள்ளனர். இக் கருத்தை ஒட்டியே ஆண்டுதோறும் இப் பிரான்மலையில் பாரிவிழா வெடுத்துச் சிறப்பிக்கப் பெற்றும் வருகிறது.

கழகக் காலத்தில் பறம்புமலை மிக்க வளம் பொருந்தியதாக விருந்தது. இதில் பெய்யினும் பெய்யாதாயினும் பொய்யா தொழுகும் பல அருவிகளும், வானத்து மீன்கள் நிறைந்திருந்தன போலும் நூற்றுக் கணக்கான சுனைகளும் இருந்தன. இவ் வுண்மைகளைப் புறநானூற்றில் கபிலர் பாடியனவாக உள்ள கீழ்வரும் பாடலடிகளால் அறியலாம்:

> ''தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
> வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
> பெய்யினும் பெய்யா தாயினும் அருவி
> கொள்ளுழு வியன்புலத்து உழைகா லாக
> மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்''

> '' கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
> பறம்பு''

> '' பிறங்கு வெள் ளருவி வீழும் சாரல்
> பறம்பு''

> '' வான்கண் அற்றவன் மலையே, வானத்து
> மீன்கண் அற்றதன் சுனையே''

'மிகப் பெரும் கள் தாழிகள் திறக்கப் பெற்று அருந்தப் பெறும்; வெள்ளாட்டு விடைகள் வெட்டி வீழ்த்தப் பெற்று அரிசியொடு கலந்து அவித்துப் புலவின் சோறு உண்ணப் பெறும்; அத்தகைய பெருவளம் பொருந்தியிருந்தது அம் மலை'' என்று வருணிக்கிருர், கபிலர்:

> '' மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
> அட்டான் ருனுக் கொழுந்துவை யூன்சோறும்
> பெட்டாங் கியும் பெரு வளம்''

'ஆண் யானை மென்று சாற்றை உறிஞ்சிக் கொண்டு கீழே உமிழ்ந்திட்ட கரும்புச் சக்கைகளைப் போல, தேனைப் பிழிந்து கொண்டு வீசியெறியப் பெற்றுச் சிதறிக் கிடக்கின்ற கோதுகளிலிருந்து, நன்ருகப் பிழிந்து கொள்ளப் பெருத தேன் ஒழுகிக் கிடக்கின்ற பாரியின் அரண்மனை முன்றில்' என்று கூறுவார், கபிலர்,

"களிறு மென்றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகும் மூன்றில்"

புறநானூறு மட்டுமன்றி ஏனைய கழக நூல்களிலும் பறம்பு மலையின் வளம் நன்கு கூறப் பெறுகிறது,

"பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரல்
பறம்பு" —சிறுபாண்

"பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய" —குறுந்

"தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறும்" —அகம்.

—இவ்வாறு அங்கிருந்த அருவியின் வளமும் அருஞ்சுனைகளின் பெருக்கமும் பொய்யா நாவிற் புலவர்களால் புகழப் பெற்றன,

பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர் தைஇத் திங்கள் போலும் தண்ணியதாக விருந்தது. சிறிய இலைகளையுடைய மூங்கில் நெல்லும், தீஞ்சுளைப் பலவின் பழமும், கொழுங் கொடி வள்ளிக் கிழங்கும், அணிநிற ஓரி பாய்தலின் மீது அழிந்து திணி நெடுங் குன்றம் சொரியும் தேனும், வளங்கொழுவி விளைந்த வரகும், பொன்னிறம் மின்னும் தினையும், செவ்விதின் விளைந்த கவ்வை என்னும் கறுப்பு எள்ளும், கொழுங் கொடி அவரையும், வியன் புலத்து நிறைந்த கொள்ளும், முதலிய பல வகை விளைவுகளும் சிறந்து விளங்கிப் பெட்டாங்கு (விரும்படி) ஈயும் பெருவளம் பழுனியதாய் (நிறைந்ததாய்) அப் பெயல் (மழை) பிழைப்பறியாப் புன்புலம் இருந்தது.

முந்நூறு ஊர்களைக் கொண்ட அத் தண் பறம்பு நன்னாட்டை ஆண்ட வென்றெறி முரசின் வேந்தன், வேள்பாரி. பாரி வரையாது அளிக்கும் பெரும் வள்ளண்மையுடையவன். சிறு வீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய பேரருளாளன்; தேர் வீ சிருக்கை நெடியோன்; இரவலர்க்கு ஈயும் வள்ளியோன்; மடவர் மெல்லியல் செல்லினும் கை வண்மை செய்யும் கடமையாளன்; அவன் மலை வேந்தர்க்கு வெல்லுதற் கரிதாக இருந்தது. கடந்து அடுகின்ற தானைகளையுடைய சேர, சோழ, பாண்டியர் மூவரும் கூடி, உடன்றனர் ஆயினும் அவன் வாழ்ந்த பறம்பு மலை பிறர் கொள்ளுதற்கு இயலாததாக விருந்தது என்பதைக் கபிலரின் பாடல் வாயிலாக அறிகிறோம்.

'மரந்தொறும் பிணித்த களிற்றின ராயினும், புலந்தொறும் பரப்பிய தேரினர் ஆயினும், தாளினாலும் (முயற்சியினாலும்)

வாளினாலும் (போரினாலும்) அப் பறம்புமலை வெல்லுதற்கு இயலாததாக விருந்தது.'

'' அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே!
ஒன்றே,
சிறியிலை வெதிரி நெல்விளை யும்மே!
இரண்டே.
தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க் கும்மே!
மூன்றே.
அணிநிற ஓரி பாய்தலின் மீது அழிந்து
திணி நெடுங் குன்றம் தேன்சொரி யும்மே!
வான்கண் ணற்றவன் மலையே! வானத்து
மீன் கண் ணற்றதன் சுனையே! ஆங்கு,
மரந் தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளில் கொள்ளலிர்; வாளில் தாரலன்!''

—என்பன கபிலரின் உரம் பொதிந்த வரிகள்!

பாரி வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளல், அவனுடைய பறம்பு மலையையும், அதன் முந்நூறு ஊர்களையும் பாடிப் பாடியே பரிசிலர்கள் பெற்றுக் கொண்டனர். தம்மிடத்துப் பாடி வந்த பாணர்களுக்கும், ஆடி வந்த விறலியர்க்குமே அவன் அவ் வூர்களைப் பரிசில்களாக அளித்து விட்டான், எங்குப் பார்த்தாலும் பாரி பாரி என்று அவன் ஒருவனையே புலவர்கள் அவனது வள்ளல் தன்மைக்காகப் புகழ்ந்து பாடினர்.

ஒருமுறை காட்டிடைச் சென்ற பாரி, ஒரு முல்லைக் கொடிதன் பூக்களுடன் கொழு கொம்பு அற்றுத் தரையில் பரந்து கிடத்தலைக் கண்டு, மனம் கசிந்து, தான் ஏறி வந்த தேரையே அதன் அருகில் கொணர்ந்து நிறுத்தி, அக் கொடியை எடுத்து, அத் தேரின் மீது படர விட்டு, அரண்மனைக்கு நடந்தே சென்றான். இந்நிகழ்ச்சியை, செல்லா நல்லிசைப் புலவர் கபிலர் வியந்து பாடுகின்றார்.

''பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பறந்தோங்கு சிறப்பின் பாரி' —புறம்.

கபிலர் வேள் பாரியின் உயிர் நண்பர். அவன் அவைப் புலவர்; அவன் இறந்த பின்பு, அவன் மகளிரை அழைத்துச் சென்று, மணம் செய்து கொள்ளும்படி விச்சிக்கோன், இருங்கோ வேள் என்னும் சிற்றரசர்களை வேண்டி, அவர்கள் மறுத்தமையால் வெறுத்துப் பின் வடக்கிருந்து உயிர் துறந்தார். இவர் பிறந்த ஊர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூர். இவர் 'பொய்யா நாவிற் கபிலர்' என்று புலவர்களால் புகழ்ப் பெற்றவர்;

நட்பு, வள்ளண்மை, நன்றி மறவாமை ஆகிய தன்மைகளை இவர் பாடல்களில் காணலாம்.

ஔவையாரும், கபிலரைப் போன்றே பாரியின் வள்ளல் தன்மையால் கவரப் பெற்றவர். ஔவையார் மேலும் பாரி அளவற்ற அன்பைக் கொண்டிருந்தான்.

ஔவையார் ஒரு முறை பாரியின் அரண்மனையில் தங்கி-யிருந்து, வேறு ஊர் போக, வலிந்து விடை பெற்றுச் செல்ல முற்பட்டார். பாரி, அவரை மேலும் சில நாள்கள் தங்கியிருந்து செல்லும்படி பலமுறை வேண்டிக் கொண்டான்; ஆனால், ஔவையார் வேறூர் செல்ல இருப்பதை வலியுறுத்தினார். அவர் பிரிவை விரும்பாமலேயே பாரி, அவர்க்குப் பல பரிசில்க-ளையும் தந்து அனுப்பி விட்டுப் பின்னர் வழிப் பறிக் கள்ளனைப் போலும் சென்று, அவற்றை வழிப்பறி செய்து வந்தான். அக் கொள்ளையடிப்பைப் பற்றிப் பாரியிடம் திரும்பி வந்து முறை-யிட்ட ஔவையார் உண்மையறிந்து, அவன் பேரன்புக்கு வியந்து, அவன் விருந்தினராக மேலும் பல நாள், அவன் அரண்மனையில் தங்கிச் சென்றார் என்று ஒரு கதை வழங்குகிறது.

—(தொடரும்)

உடலுறுப்புப் பெயர்க் காரணங்கள்!

முதல் அல்லது தலைமையான இடத்திலிருப்பதால் அவ்விடத் துறுப்பு தலை எனவும், காணுந் தொழிலால் அது கண் எனவும், ஒலியைக் கதுவும் (கதுவல்—பற்றிக்கொள்ளல், வாங்கல்) தொழிலால் அது காது எனவும், மூகரும் தொழிலால் அது மூக்கு எனவும், வழியாயிருத்தலின் அது வாய் எனவும், பக்கங்களில் இருத்தலின் அது கை (பக்கம்) எனவும், நடுவே இருத்தலினாலும், வாயின் இறுதியாதலாலும், அஃது அகடு (வயிறு) எனவும், கால்($\frac{1}{4}$) என்னும் எண்ணளவுள்ள இடமான முழங்காலுக்குக் கீழிருத்தலின் அது கால் எனவும், அரை($\frac{1}{2}$) என்னும் எண்ணள-யுள்ள இடமாயிருத்தலின், உடலின் நடுப் பகுதி அரை எனவும், உடலிலுள்ள ஒவ்வோருறுப்பும் அதனதன் இடத்தாலும், தொழி-லாலும், குணத்தாலும், அளவாலும் பெயர் பெற்றுள்ளன.

சிந்திப்பதற்கு....

ஃ நேர்மை தனியாகச் செல்லும்; பொய்க்குத்தான் துணை வேண்டும்.

—எபிக்டெட்சு

ஃ தகுதியில்லாத பிள்ளைகளால் வீடு மட்டுமன்று; நாடே போகப் போக அழிந்து போகும்.

—கான்பூத்சே

ஃ வெற்றி, விடாமல் உழைப்பவர்களையே சென்றடைகிறது.

—நெப்போலியன்

தமிழ், வடமொழி, திரவிட இந்திய, ஆங்கில மாதப் பெயர்கள்!

இந்தியாவில் வழங்கும் வடமொழி, இந்தி, பிற திராவிட மொழிகளில் உள்ள மாதப் பெயர்கள் அனைத்தும் பழந்தமிழ் ஓரைப் (இராசி மண்டிலப்) பெயர்களையே அடிப்படையாகக் கொண்டவை,

தமிழ் மாதப் பெயர்கள் மதியை (திங்களை) அடிப்படையாகக் கொண்டவை. எனவே மதிமானம் எனப்பெறும் கணக்கில் அமைந்தன. மதிமானத்தை வடமொழியில் சந்திரமானம் என்பர்.

ஆரியர்கள் மாத வரிசை கதிரவ மானத்தை (சூரிய மானத்தை) அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் மாதங்கள் மதியை (திங்களை) அடிப்படையாகக் கொண்டவையாகலின் இவை மாதங்கள் (மதி-மதியம்-மாதம்) எனப் பெற்றன; திங்களை (முழு நிலவை) அடிப்படையாகக் கொண்டதனால், மாதம், திங்கள் என்றும் அழைக்கப் பெற்றது; மாதம், திங்கள் என்பன தூய தமிழ்ச் சொற்கள்.

மாதம் என்பதை வடமொழியாளர் மாஸ என்று திரித்துக் கொண்டனர். பின்பு மாஸத்திலிருந்துதான் மாதம் வந்தது என்பதாகப் பொய்த்து வழங்கினர். ஏனெனில் மாதத்திற்கும் ஆரியர் மாத வரிசைக்கும் சற்றும் பொருத்தமில்லை, ஆரியர் மாத வரிசைக் கணக்கு சூரியனை அடிப்படையாகக் கொண்டவை-யாகலின்.

மதிய (பெளர்ணமி) நாள் அன்று, திங்கள் (மதியம்) எந்த விண்மீன் தொகுதியில் (ஓரையில்) (இராசியில்) அமைகிறதோ; அந்த விண்மீன் தொகுதியின் (ஓரையின்) பெயரை அந்த மாதத்-திற்கு இட்டு வழங்குவதே தமிழர் மரபு.

ஆனால், மாதம் தொடங்கும் நாளில், காலையில், கதிரவன் (சூரியன்) எந்த ஓரைக் கூட்டத்தில் தோன்றுகிறதோ, அந்த ஓரைக் கூட்டத்தில் உள்ள தலைமீன் பெயரால் அம்மாதப் பெயரை வழங்குவதே வடநூல் மரபு.

பின் வரும் பட்டியலில் ஓரைப் பெயர்களையும், அவற்றை அடிப்படையாகக் கொண்ட தமிழ், வடமொழி, இந்திய மாதப் பெயர்களையும் அவற்றுக்கு இணையாகக் கொண்ட ஆங்கில மாதப் பெயர்களையும் காண்க. (தொடர்ச்சி அடுத்த பக்கம்)

உறுப்பினர்களைச் சேர்த்து உதவுங்கள்!

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களை நிறுத்த வேண்டாம் என்று எழுதும் அன்பர்கள் ஒவ்வொருவரும் பத்து உறுப்பிர்களைச் சேர்ப்பது என்று உறுதி பூண்டு விட்டால் எவ்வளவு பயனுடையதாக இருக்கும்! எண்ணிப் பாருங்கள்; செயல்படுங்கள்!

ஓரைப் பெயர்		மாதப் பெயர்கள்				
தமிழ்	வடமொழி	தமிழ்	வடமொழி	இந்தியம்	பிற திராவிடம்	ஆங்கிலம்
மேழம்	மேஷ	மேழம்	சைத்திரம்	சைத்ரா	சித்திரை	ஏப்பிரல்-மே
விடை	ரிஷப	விடை	வைசாகம்	வைசாகா	வைகாசி	மே-சூன்
இரட்டை (ஆடவை)	மிதுன	இரட்டை (ஆடவை)	ஜேஷ்டம்	ஜியேஷ்டா	ஆனி	சூன்-சூலை
கடகம்	கடக	கடகம்	ஆஷாடம்	ஆஷாடா	ஆடி	சூலை-ஆக
மடங்கல்	சிம்ஹ	மடங்கல்	சிராவணம்	சிராவணு	ஆவணி	ஆக-செப்
கன்னி	கன்யா	கன்னி	பாத்ரபாதம்	பாத்ரபத	புரட்டாசி	செப்-அக்
துலை	துலா	துலை	ஆச்வயுஜம்	ஆஸ்வின	ஐப்பசி	அக்-நவ
நளி	விருச்சிக	நளி	கிருத்திகா	கார்த்திக	கார்த்திகை	நவ-திசம்
சிலை	தனுஸ்	சிலை	மார்க்கசிரம்	ஆக்ரஹயாணு	மார்கழி	திசம்-சன
சுறவம்	மகர	சுறவம்	புஷ்யம்	பௌஷா	தை	சன-பிப்
கும்பம்	கும்ப	கும்பம்	மாகம்	மாகா	மாசி	பிப்-மார்
மீனம்	மீன	மீனம்	பால்குணம்	பால்குணு	பங்குனி	மார்-ஏப்

தமிழ் மாத வரிசை சுறவத்திலிருந்து தொடங்கி சிலையில் முடிவடைகிறது: சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, இரட்டை (ஆடவை), கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை—என்பது தமிழ் மாத வரிசை.

''சிந்துவெளி மக்கள் வீடுகள் கட்டியுள்ள முறைகளிலிருந்து ஓரை (இராசி) மண்டிலங்களின் இயக்கங்களைக் கவனித்து வந்தனர் என்பது தெளிவாகிறது. முத்திரைகளில் குறிப்பிட்டுள்ள சில குறியீடுகள் ஓரைகளை (இராசிகளை) த்தான் குறிக்கின்றன. அம்மக்களது ஆண்டுத் தொடர்ச்சி (ஏறக்குறைய) சுறவ (தை) மாதத்திலிருந்தே கணிக்கப்பட்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

முனைவர். மா. இராசமாணிக்கனார்.
'சிந்து வெளி நாகரிகம்'-நூல்

''முன்னாளில் தமிழாண்டு (சுறவம்) தை முதல் மாதத்தில்தான் இருந்தது.'' —சா. கணேசன்

உருசியக் குடியரசில் சிறப்புப் பள்ளிகள்!

சோவியத்துக் கல்வித் துறையில் பல குறைபாடுகள் உள்ளன. இதுவரை சமச்சரி மாணுக்கனே உருவாக்கம் செய்வதிலும், சமச்சரி ('சராசரி') கல்வித் தரத்தைச் செயல்படுத்துவதிலும் அது கவனத்தைச் செலுத்தி வந்தது. சிறப்புத் திறமை பெற்ற, அறிவுமிக்க குழந்தைகளைப் பற்றி அதிக கவனம் செலுத்தப்படவில்லை. மாணவர்களைப் போலவே, ஆசிரியர்களும் பெரும்பாலும் 'சமச்சரி' திறமை பெற்றவர்களாகவே விளங்கினர்.

உருசியக் கூட்டுக் குடியரசின் கல்வி அமைச்சகம் சில சிறப்புக் கல்விப் பள்ளிகளைத் திறக்க முடிவு செய்துள்ளது. புரட்சிக்கு முன்பு உருசியாவில் இருந்த மற்களம் (இலிசியம்) மற்றும் உடற்பயிற்சியகம் (Gymnasium) போன்ற சிறப்புப் பள்ளிகளைத் திறக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட 150 சிறப்புப் பள்ளிகள் செப்டம்பர் முதல் பக்கலிலிருந்து செயல்படத் தொடங்கும். இது மேலிருந்து உருவான திட்டமன்று. சிறப்புத் திறமை படைத்த மாணவர்களுக்குச் சிறப்பான வசதிகள் அளிக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளும் முயற்சிகளுமே, இத்திட்டம் உருவாவதற்குக் காரணமாக இருந்தன.

இப் பள்ளிகளில் சேருவதற்குத் தனிக் குழுக்கள் மூலம் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர், இக் குழுக்களில் ஆசிரியர்கள், மருத்துவர்கள், மனவியல் அறிஞர்கள் ஆகியோர் இருப்பர்.

இப் பள்ளிகளில் திறமைபெற்ற ஆசிரியர்கள், மாணவர்களுக்கு, முதல் ஏழு வகுப்புகளில் பல்வேறு துறைகளின் அடிப்படைக் கருத்துகளை கற்றுத் தருவர். எட்டிலிருந்து பதினொன்றுவது வகுப்பு வரை தேர்ந்தெடுத்த பாடங்களில் ஆழமான பயிற்சி அளிக்கப்படும். இந்த வகுப்புகளில் மாணவர்கள் இரண்டாவது வெளி நாட்டு மொழியைக் கற்பார்கள். இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகள் கற்றுக் கொடுக்கவும் திட்டம் உள்ளது.

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்.

தனியிதழ்	விலை	உரு.	1-00
ஆண்டுக் கட்டணம்	,,	,,	50-00
அரையாண்டுக் கட்டணம்	,,	,,	25-00

தொடர்புக்கு : தமிழ்நிலம், 5, அருணாசலத் தெரு, சென்னை 5-

விளம்பர ஏமாற்றுகள்!

கோ. கணேசன்
(இந்திய தர உறுதிப்பாட்டு நிறுவனம்.)

(கட்டுரை தூய தமிழ்ப்படுத்தப் பெற்றுள்ளது.)

பொருள்களில் தரம் இல்லை!

வகை வகையான விளம்பரங்கள்! வியப்பும் வேடிக்கையும் நிறைந்த விளம்பரங்கள்! கண்களைக் கவர்வன; மனத்தை இழுப்பன! ஆனால்... வலிவான விளம்பரப் பொருள்களில் தரம் இருப்பதில்லையே! வாங்குபவர் நிறைவு அடைவதில்லையே! இ'து உண்மைதானே!

வாடிக்கையாளர்கள் அஃதாவது நுகர்வோர் தங்கள் தேர்வில் தவறு செய்ய மாட்டார்கள் என்று நினைப்பது அந்தக் காலம்!

தேர்ந்தெடுப்பதில் தடுமாற்றம்!

வாங்கப் பெறும் பொருள்கள் விலை மலிவாகவும், நீடித்து உழைக்கக் கூடியதாகவும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தரத்தில் உயர்ந்ததாகவும், இருக்கக் கூடிய பொருளைத் தேடிக் கண்டு பிடித்து வாங்குவதில் தலைசிறந்தவர்களாக விளங்கிய வாடிக்கையாளர்கள், இப்போதெல்லாம் எதை வாங்குவது, எதைத் தேர்ந்தெடுப்பது எனத் தடுமாறும் நிலையில் இருக்கிறார்களென்றால், இதற்குக் காரணம் எண்ணற்ற, தரமற்ற விளம்பரங்கள்தாம்,

ஒரே மாதிரி ஒலிகள்:

இது விளம்பர ஊழி என்பதை நாம் அறிவோம். ஆனால், விளம்பரங்கள் நுகர்வோரை ஏமாற்றக் கூடாதல்லவா? இங்கே ஓர் எடுத்துக் காட்டு. 'டாட்டா சால்ட்' என்பதுபோல் 'டாஸ்ஸா சால்ட்' என்று ஒரு பொருள். 'டால்மியா பிஸ்கட்' என்பதும் 'டாலமா பிஸ்கட்' என்பதும் ஒரே மாதிரி காதில் விழவில்லையா? இது போன்று 'நிர்மா டிடெர்ஜெண்ட் பவுடரும்' 'நிர்மா சேஸ்-4 பவுடரும்' ஒன்று போல ஒலிப்பன. ஆனால் இவை வேறு வேறு. இவற்றின் பெயர் ஒலிகளில் உள்ள ஒற்றுமையைக் கண்டு நுகர்வோர் இரண்டு பொருள்களும் ஒரே நிறுவனத்தைச் சார்ந்தவை என்று நினைத்து ஏமாற இடமிருக்கிறதில்லையா? நுகர்வோர் ஏமாறுகிறார்களா? அல்லது ஏமாற்றப்படுகிறார்களா என்பதுதான் கேள்வி.

உலகில் ஏமாற்றுகிறதற்குப் போட்டி வைத்தால்
பரிசு நம் நாட்டிற்கே கிடைக்கும்!

கடைத் தெருவுக்குச் சென்றால் (அஃது எந்த ஊர்க் கடைத் தெருவானாலும் சரி) பொருள்கள் நிரம்பி வழிகின்றன: எண்ணற்ற பொருள்கள்! சில சமயம் ஒரே மாதிரி காதில் விழக்கூடிய பெயர்கள். பார்வைக்கு ஒரே தோற்றமுடைய பொருள்கள்;

இப்படி பலப்பல; மக்களை ஏமாற்றும் போட்டி ஏதேனும் உலக அளவில் வைக்கப் பெறுமேயானால்; உறுதியாக நம் நாட்டிற்கு வெள்ளிக் கோப்பை கிடைத்து விடும்.

எங்கும் விளம்பரம்! விளம்பரம்!

வண்ண வண்ண விளக்குகளைக் கொண்டு கண்ணைக் கவரும் விளம்பரங்கள்! காதைக் கிழிக்கும் விளம்பரங்கள்! காதைக் கிழிக்கும் விளம்பரப் பாடல்கள்! தெருக்களில், கடைவீதிகளில்; தொலைக்காட்சியில். வானொலியில். செய்தித்தாள்களில்.-இப்படி எங்குத் திரும்பினாலும் விளம்பரம் விளம்பரந்தானே! பொருளியல் அரசர்களாக விளங்கி வந்த நம் நுகர்வோர்கள் தற்காலத்தில் விளம்பரங்களைக் கண்டு திக்குமுக்காடுகின்றனர். பொதுவாக, வீட்டுப் பயன்பாட்டுக்கான சின்னப் பொருளை வாங்குவதானாலும் சரி, விலையுயர்ந்த கணினி (கம்ப்யூட்டர்) போன்ற பொருள்களை வாங்குவதானாலும் சரி, நம் தேவைகளை—எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யக்கூடிய பொருள்களைத் தேர்ந்தெடுக்க முடிவதில்லை. இந்நிலை ஏனென்றால், நாம் விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்டே நம் தேவைக்கான பொருள்களைத் தேர்வு செய்யும் நிலையில் நாம் உள்ளோம்.

மிகைப்படுத்தப் பெற்ற செய்திகள்:

தொலைக் காட்சியில் ஐந்து விநாடிகள் காட்டப்படும் விளம்பரங்களில், கால் பக்கத்தில் காணப்படும் செய்தித்தாள் விளம்பரங்களில். 5' × 5' என்ற அளவில் எழுதப்படும் விளம்பரப் பலகைகளின் விளம்பரங்களில், பொருள்களின் கூடுதல் சார்பான தன்மைகளே பல நேரங்களில் மிகைப்படுத்திக் காட்டப் பெறுகின்றன; எழுதப் பெறுகின்றன. பொதுவான முழு விளக்கங்களை இந்த விளம்பரங்கள் தருவதில்லை.

குழம்பிப் போவதுதான் மிச்சம்!

தொலைக் காட்சிப் பெட்டியிலும் சரி, வானொலியிலும் சரி, ஒரே பொருளின் பல உருவாக்கங்களுக்கு பல செய் தொழிலகங்களின் விளம்பரங்களை ஒன்றன்பின் ஒன்றாக, அதுவும் ஒவ்வொன்றையும் ஐந்து விநாடிகள் மட்டுமே காட்டும் போது, நுகர்வோர் குழம்பித்தான் போகிறார்கள்!

தரமான பொருள்களைப் பெறுவது எப்படி?

விளம்பரங்களைக் கண்டு மயங்காத தெளிவு, மலிவான பொருளையே வாங்க வேண்டும் என்கிற வேட்கை இல்லாத தன்மை, தேவையான பொருள்களை மட்டுமே வாங்க வேண்டும் என்கிற மன உறுதி, தேவையான விளக்கங்களை ஆராய்ந்த பின்பே பொருள்களைத் தேர்ந்தெடுப்பது ஆகியவற்றை நுகர்வோர் கொள்கைகளாகக் கொண்டால் நுகர்வோர் தரமான பொருள்களையே பெறலாம்.

ஒவ்வொரு பொருளையும் ஆய்வுச் சாலைகளில் ஆய்வு செய்யாமல் தரமான பொருளைக் கண்டு பிடிப்பது எப்படி? ஒவ்வொரு பொருளையும் ஆய்வு செய்த பின்பே வாங்குவது இயலாத செயல்.

இதனால் நடுவண் அரசு. படித்தவர்களும் படிக்காத எளிய. வர்களும் எளிதில் தரம் தெரியாத பொருள்களிலிருந்து, தர-முள்ள பொருள்களைப் பிரித்தறிய ஐ. எசு. ஐ. (I. S, I.) முத்தி-ரையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த முத்திரையுள்ள எல்லாப் பொருள்களுமே தரமுள்ள பொருள்கள் தாம்.

வாங்குவோர் கவனிக்க வேண்டியவை:

(1) விற்பனையாளர்களின் திறமையான பேச்சினால் மயங்கக் கூடாது.

(2) விளம்பரத்தின் அடிப்படையில் எந்தப் பொருளின் தரத்தையும் எடை போடலாகாது.

(3) ஒரு குழுமத்தார் பல பொருள்களைப் பல அளவுகளில் உருவாக்கம் செய்யலாம், அவர்கள் ஒரு பொருளுக்கு அல்லது குறிப்பிட்ட ஒரு பொருளிலும் ஓர் அளவுக்கு மட்டும் ஐ. எசு. ஐ. முத்திரை பெற்றிருக்கலாம். ஆனால். விளம்பரங்களில், நாங்கள் ஐ. எசு. ஐ முத்திரையிட்ட பொருள்களையே விற்பனை செய்-கிறோம் என்று கூறினால் நம்பக்கூடாது. நாம் வாங்கும் குறிப்-பிட்ட பொருளில் ஐ. எசு. ஐ. முத்திரை உள்ளதா என்று சரி பார்க்க வேண்டும்.

முகாமையாக மின்சாரப் பொருள்களின் தரம் குறைவாக இருக்குமானால். உயிருக்கும் உடலுக்கும் தீங்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் பாதுகாப்புக்கு முதலிடம் கொடுத்து, ஐ. எசு. ஐ. முத்திரையிட்ட பொருள்களையே வாங்குகின்ற பழக்-கத்தை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

(4) எந்தப் பொருள் வாங்கினாலும் விலைப் பட்டியல் (Receipt Bill) கேட்டு வாங்க வேண்டும். வரிச் சலுகை காரணமாக—பட்டியலைக் கேட்டு வாங்கா விட்டால், தரமில்லாப் பொருள்-களை அவர்கள் விற்பனை செய்வதற்கும், ஒரு பொருள் விற்பனைக்கு உரிய வரியை அரசுக்கு அவ்விற்பனையாளர் செலுத்-தாமல் மறைப்பதற்கும் நாம் வழி ஏற்படுத்திக் கொடுப்பதாக ஆகிவிடும்.

(5) எந்தெந்தப் பொருள்களுக்கெல்லாம் விளம்பரம் வரு-கிறதோ அந்தந்தப் பொருள்களையெல்லாம் வாங்க வேண்டும் என்னும் நயப்பாசையை நாம் ஏற்படுத்திக் கொள்ளாமல், தேவையான இன்றியமையாத பொருள்களையே நாம் வாங்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

(6) தரமான பொருள்களே சிறந்தவையாக, நீடித்து உழைப்பவையாக, ஏதம் (ஆபத்து) இல்லாதவையாக, நாம் செலவிடும் பணத்திற்கு ஈடானவையாக இருக்கும் என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

—நன்றி 'தினமணி' ஆக. 15, '90.

ஒரே ஒருவராகிலும் எதிர்த்துக் கேட்க வேண்டும்!

''எல்லோரும் பணிந்து விட்டார்கள்; நான் மட்டும் பணியாததால் உனக்கோர் இழப்பா?''

—என்று கட்டபொம்மன் வெள்ளையரிடம் எதிர்த்துக் கேள்வி கேட்டான்.

வெள்ளையர்களுக்கு இழப்புத்தான். எத்தனையோ மன்னர்கள் அடி பணிந்தாலும், இடையில் எழுந்த ஓர் இரண்டு இழப்புத்தான் இந்திய விடுதலை வேட்கைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன; உயிர் கொடுத்தன.

தட்டிக் கேட்க ஆள் வேண்டும்!
ஓர் ஆளாகிலும் வேண்டும்!

ஒவ்வொருவராகப் பத்துப் பேர் ஒரு கிளியைப் பார்த்து விட்டு ''இது கிளி இல்லை; குயில்''—என்று வேண்டுமென்றே சொல்கிறார்கள் என வைத்துக் கொள்வோம்; அவர்களின் பின்னால் வருபவர்கள் அனைவருமே அதைக் குயில் என்றேதான் சொல்ல முற்படுவார்கள்.

ஆனால், முதல் பத்துப் பேர்களில் ஒருவராகிலும் அதைக் கிளி என்று சொல்லியிருந்தால், பின்னால் வருபவர்களில் பலர்க்குக் கிளி என்று சொல்வதற்குத் துணிவு வந்திருக்கும்.

இஃது ஒரு மாந்த மனவியல் (Social Psycology) உண்மை.

ஆம்! ஏமாற்றுக்காரர்களை எதிர்க்க ஒருவராகிலும் ஒரே ஒருவராகிலும் வித்திட வேண்டும்!

அப்பொழுதுதான் உண்மை அழியாமல் காப்பாற்றப்படும்!

—கீ. கா.—நன்றி—சர்வோதயம்; சூன். '90

குடிகாரர்களின் வகைகள்!

காரணங்களைப் பொறுத்து மதுக் குடிகாரர்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தன்னிலை மறக்க வேண்டும்; குடித்து விட்டு உலகத்தை மறந்து, மயக்க நிலை பெற வேண்டும் என்று குடிப்பவர்கள் அவலநிலைக் குடிகாரர்கள்.

2. பசியை மறக்கவும், பணியின் சுமையை, உழைப்பின் களைப்பைக் குறைக்கவும் குடிப்பவர்கள் பணிச்சுமைக் குடிகாரர்கள்.

3. நரம்புத் தளர்ச்சியுடையோர், உணர்ச்சி வயப்படுவோர், கோழைகள், ஓவியர், பாடலாசிரியர்கள், நடிகர் எனும் கலைஞர்கள், குடித்த பின் தங்களின் கற்பனைக் குதிரையை ஓட விட்டுப் படைப்புகளை உண்டாக்க மதுவின் துணையை நாடுபவர்களைத் தேவைக் காலக் குடிகாரர்கள் எனலாம்.

4. விருந்துக்காகவும் நண்பர்களுக்காகவும் குடிப்பவர்களைக் கேளிக்கைக் குடிகாரர்கள் எனலாம்.

—சி. இராசமோகன்; நன்றி, தினமணி, 5-6-90.

பூசை முறை!

பூசை முறைகள் தமிழ்நாட்டிலிருந்துதான் இந்தியாவெங்கும் பரவின.

—ச. கு. கணபதி (ஐயர்)
'தமிழின் கதை' பக்.

00

சொன்ன சொல்லைக் காக்க!

ஓசா நசுருத்தீனின் பணப்பை பொதுவாகக் காலியாகவே இருக்கும்.

அவர் ஒரு நாள் அரண்மனைக்கு வந்தார். மன்னர் தாமர்லேனிடம் தம் குழந்தைகளுக்கு உருட்டி (ரொட்டி) வாங்குவதற்காக ஒரு தினார் (உருசிய நாணயம்) தருமாறு வேண்டினார்.

''சரி, உனக்கு ஒரு தினார் தருகிறேன். அதற்கு முன் இங்கு நடக்கும் வில் போட்டியைக் கண்டு வருவோம்'' என்றார் மன்னர்.

போட்டி நடைபெறும் இடத்தில் உயர்குடி மக்கள் அம்பை எய்து கொண்டிருந்தனர். ஒருவர் கூட இலக்கைக் குறி வைத்து அம்பு எய்தவில்லை. இதனால் மன்னருக்குச் சினம் ஏற்பட்டது. போட்டியில் கலந்து கொண்டவர்களைப் பெரிதும் கடிந்து கொண்டார் மன்னர். பிறகு அவர் நசுருத்தீனிடம் ஓர் அம்பைக் கொடுத்து, அதைத் தொடுக்கும்படி உத்தரவிட்டார்.

நசுருத்தீன் அம்பு குறிதவறாமல் இலக்கைத் தாக்கிற்று. நசுருத்தீன் குறிதவறாமல் அம்பு எய்தியதைக் கண்டு மகிழ்ந்து போன மன்னர் 100 தினார்களை அவரிடம் கொடுக்கச் சொன்னார்.

போட்டி முடிந்ததும், நசுருத்தீன் மன்னரை அணுகினார்.

''மன்னா, கொடுத்த சொல்லுறுதியை மறந்து விட்டீர்களே! அது நல்லதா?'' என்றார்.

''என்ன சொல்லுறுதி?'' மன்னர் வியப்புடன் கேட்டார்.

''ஒரு தினார் தருவதாகவன்றோ கூறினீர்கள்.''

''ஆனால், உனக்கு நூறு தினார்கள் கொடுத்தேனே.''

''கொடுப்பதாக உறுதியளிக்காத நூறு தினார்கள், கொடுப்பதாக உறுதியளித்த ஒரு தினாருக்கு ஈடாகாது. மாமன்னர் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அதுவே முறை'' என்றார் நசுருத்தீன், —நன்றி. 'சோவியத்து நாடு' ஆகத்து. '90.

பேரண்ட ஆற்றல் மருத்துவம்!

உருசிய மருத்துவர் யூரி எரொன் தியோவ் மருந்துகளையோ அறுவை முறைகளையோ பயன்படுத்தாமல் எண்ணற்ற நோய்களுக்கு பண்டுவம் செய்யும் வியப்பான வழிமுறை ஒன்றை உருவாக்கியிருக்கிறார். பெரும்பாலும் தேறமாட்டார்கள் என்று கைவிடப் பெற்ற 30,000-க்கும் அதிகமான நோயாளிகளைக் கடந்த 20 ஆண்டுகளில் இவர் குணப்படுத்தியுள்ளாராம்.

இவர் தமது பண்டுவ முறை குறித்துப் பின் வருமாறு கூறுகிறார். ''பேரண்டம் (Cosmos) முழுவதும் நிரம்பியுள்ள உயிரியல் ஆற்றலைப் பெறும் திறன் நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. இவ்வாற்றலை நோய் தீர்ப்பதற்கும் பயன்படுத்த முடியும்.

நான் இவ் வாற்றலை நிலத்திலிருந்தும், நீரிலிருந்தும், காற்றிலிருந்தும், முகாமையாக, மிகத் தொலைவிலுள்ள விண்மீன்களிலேயே மிகவும் ஒளியுள்ளதான 'சிரியசு' என்னும் விண்மீனிலிருந்தும் பெறுகிறேன்.

உடலில் குறிப்பிட்ட பகுதிகளில் ஆற்றல் பற்றாக் குறையாக இருப்பதே நோயாகும். அந்தப் பகுதிகளைக் கண்டுபிடித்து, எனக்குள்ளே திரட்டி வைத்துள்ள பேரண்ட ஆற்றலை அப் பகுதிகளில் செலுத்துகிறேன்.''

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600 005. (தமிழகம்)